# அவசர கூட்டப்பொருட்கள்

1. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 52 வரையுள்ள பகுதிகளில் தனிநபர் கழிப்பறை, சமுதாய கழிப்பறை மற்றும் பொது கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வார்டிலும் பள்ளி தலைமை ஆசிரியர், மாணவ, மாணவியர்கள், சுய உதவிக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், வர்த்தக சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்த மாட்டோம் என உறுதிமொழி படிவத்தில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் திறந்த வெளி கழிப்பிடமாக பயன்படுத்துவதை தடை செய்தும் மாநகராட்சி அனைத்து பகுதிகளிலும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக அறிவித்து அரசாணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும், பொது மக்கள் இப்பொருள் தொட்பாக ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் தெரிவிப்பது குறித்தும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதற்கு ஆகும் அனைத்து செலவுகளையும் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13258/2016/எச்1

**தீர்மானம் எண்.530 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இந்திய சுதந்திர போராட்ட வீரரும் தமிழ் பெரும் புலவருமான சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்கள் தமிழுக்கு செய்த தொண்டினை போற்றும் விதமாக சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார், இடலாக்குடி சந்தி தெருவிற்கு "சதாவதானி செய்கு தம்பி பாவலர் தெரு" என பெயர் மாற்றம் செய்து அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [ ந.நி-V(2) துறை நாள்.15.09.2020 இன்படி அரசாணை வெளியிடப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்

கோப்பு எண்.12406/2017/எப்2

**தீர்மானம் எண்.531 – அங்கீகரிக்கப்பட்டது**